DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***

IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous : SC No. 78/2020
Deposition of Witness for : PW 12

| | |
|---|---|
| Name. | திரு. வெங்கடேசன் |
| Father /Husband Name | |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 12.02.2026.

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது செம்மஞ்சேரி காவல் உதவி ஆணையராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 2016ம் ஆண்டு நான் மதுராந்தகம் வட்ட காவல் ஆய்வாளராக பணி புரிந்த போது சிறப்பு உதவி ஆய்வாளர் கோதண்டம் என்பவர் குற்ற எண்.310/2016 முதல் தகவல் அறிக்கையை மேல் விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்தார். அதனை பெற்றுக் கொண்ட நான் 28.05.2016 அன்று காலை 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகன் மற்றும் சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் அ.த.சா.ஆ.6 பார்வை மகசர் மற்றும் அ.த.சா.ஆ.7 வரைபடம் தயார் செய்தேன். பின்னர் புகார்தாரர் கண்ணன், சாட்சிகள் கோகுல்

ராஜ், லோக நாயகி, காசியம்மாள், முருகன் மற்றும் சுரேஷ் என்பவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கு எதிரிகளை 28.05.2016ம் தேதி காலை 10.30 மணியளவில் மதுராந்தகம் ஏரிக்கரை அருகே வைத்து கைது செய்தேன். பின்னர் 1ம் எதிரி லட்சுமணன் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சண்முகம் மற்றும் வேல்முருகன் முன்னிலையில் பதிவு செய்தேன்.

2) 1ம் எதிரி அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட இரும்பு ராடை என்னிடம் எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் **அ.த.சா.ஆ.8.** பின்னர் 12.00 மணிக்கு வாதியின் வீட்டு அருகில் 1ம் எதிரி அடையாளம் காட்ட, சா.பொ.1, சுமார் 3 அடி நீளமுள்ள இரும்பு ராடை அதே சாட்சிகள் முன்னிலையில் அ.த.சா.ஆ.9 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். பின்னர் சாட்சிகள் சண்முகம் மற்றும் வேல்முருகன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை நிலையம் அழைத்து வந்து, பின்னர் தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் இவ்வழக்கில் காயமுற்ற கோகுல் ராஜ் என்பவருக்கு முதல் சிகிச்சையளித்த மருத்துவர் ரவி என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேட்டு நகலை பெற்றேன்.

பின்னர் மேல் சிகிச்சை செய்த மருத்துவர் ராஜேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, கோகுல் ராஜ் என்பவரின் காயச் சான்றிதழ் பெற்றேன். பின்னர் இவ்வழக்கில் சட்டப்பிரிவை 294 பி, 324, 506(ii) மற்றும் 307 இதச லிருந்து 294 பி, 352 மற்றும் 307 உ/இ 34 இதச ன் கீழ் அ.த.சா.ஆ.10 பிரிவு மாற்று அறிக்கையை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன. பின்னர் இந்த வழக்கில் புல விசாரணை முடித்து, எதிரிகள் மீது 294 பி, 352 மற்றும் 307 உ/இ 34 இதச ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) முதல் தகவல் அறிக்கை என் பார்வைக்கு காலை 09.00 மணியளவில் வைக்கப்பட்டது. அ.சா.1 யிடம் புகார் மனுவை யார் எழுதினார்கள் என்று நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. மதுராந்தகம் ஏரிக்கரையில் இரு புறமும் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். கைது குறிப்பாணையில் எந்த திசையில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் நான் எதிரிகளைக் கைது செய்தேன் என்ற விவரம் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் உண்மையில் அந்த இடத்தில் வைத்து கைது செய்திருந்தால், எந்த திசையில் வைத்து கைது செய்தேன் என்ற விவரம் ஆவணங்களில் குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூல சாட்சி போட்டுள்ள நபர் பெயர் சண்முகம் கிடையாது என்றாலும், அவர் பெயர் சண்முக சுந்தரம் என்று சொன்னாலும்,

அவர் சண்முக சுந்தரம் என்று தான் கையொப்பம் செய்வார் என்று சொன்னாலும் சரியல்ல.

2) கைப்பற்றுதல் மகசர் எவ்வாறு தயார் செய்தேன் என்றால், வழக்கமாக செல்லும்போது மடிக்கணினியும், பிரிண்டரும் எடுத்து சென்று தயார் செய்வோம். எந்த இடத்தில் வைத்து பதிவிறக்கம் செய்யப்பட்டது என்றும், அந்த நபரையும் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றாலும் சரிதான். அவ்வாறு கைப்பற்றப்பட்ட இடத்தில் பதிவிறக்கம் செய்திருந்தால், அதனைப் பற்றிய விவரத்தை வழக்கில் சொல்லியிருப்பேன் என்றாலும், ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றாலும் சரியல்ல. அடிபட்ட நபரை நான் விசாரிக்கும் போது சென்னை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். அதன் பின்பு நான் மீண்டும் அவரை நான் விசாரணை செய்யவில்லை. சம்பவத்திற்கு மூல காரணம் யாரென்ற விவரம் தெரிய வந்ததா என்றால், எதிரிகள் அங்கு வைத்து அடித்தார்கள். சம்பவத்திற்கு முக்கிய காரணம் புகார்தாரர் தான் என்றாலும், அவர் மீது வழக்கு ஏதும் பதியாமல், அவர் அளித்த பொய்யான புகாரைப் பெற்று, சம்பவ இடம் செல்லாமல் அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**